Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**12 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | இருளாண்டி |
| Father/Husband Name | : | கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.12.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் வஉசி நகரில் வசித்து வருகிறேன். நான் லோடுமேன் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் எனது மகன் ஆவார். அவர் இறப்பதற்கு முன்பு டிரைவர் தொழில் செய்து வந்தார். அ.சா.4. கபிலன் எனது பேரன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 05.03.2021ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான், எனது பேரன் கபிலன், எனது மருமகள் சுமதி, மற்றொரு மகன் ரவி ஆகியோர்கள் வீட்டில் இருந்தபோது தகவல் கிடைத்ததின் பேரில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது மகன் பனையடியான் இறந்தநிலையில் இருந்தார். எனது மகன் பனையடியானுக்கு தலை, முதுகு, கால், தொடை ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. எனது மகன் எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனது மகன் ரவி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து போன் செய்தார் என்றும் உடனே நானும், எனது மருமகள் சுமதி, எனது மனைவி ஆகியோர்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் அங்கு எனது மகன் இறந்தநிலையில் பிரேத சவக்கிடங்கில் கிடந்தார் என்றும் எனது மற்றொரு மகன் ரவியிடம் என்ன நடந்தது என்று நான் கேட்டேன் என்றும் அப்போது எனது மகனை எதிரிகள் அருவாள், கட்டை போன்ற ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டார்கள் என்று என்னிடம் சொன்னார் என்றும் இது குறித்து எனது மற்றொரு மகன் ரவி கேணிக்கரை காவல் நிலையத்தில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இறந்துபோன என் மகன் பனையடியான் திருமணமாகி சுமார் 18 வருடங்களாக தனியாக இருந்து வருகிறார் என்றால் சரிதான். நல்லது கெட்ட சம்பவங்களுக்கு மட்டும் வீட்டிற்கு வந்து செல்வார் என்றால் சரிதான். என் மகன் பனையடியான் எங்கு வேலை பார்க்கிறார் என்ற விவரம் தெரியாது. என் மகன் பனையடியான் மீது நாகர்கோவிலில் கொலை வழக்கு இருக்கிறது என்றால் சரிதான். என் மகன் பனையடியான் மது அருந்துவார் என்றால் சரிதான். அதனால் பலரிடம் தகராறு செய்து பலவழக்குகள் காவல்நிலையத்தில் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். எனக்கு தகவல் கிடைக்கும்போது இரவு 07.00 மணி இருக்கும். நேரடியாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு தான் சென்றேன். எனக்கு தகவல் சொன்ன நபர் பெயர் தெரியாது. எனது மகன் நாகர்கோவிலில் இருந்தபோது கொலை வழக்கிற்கு பயந்து தான் இருந்தார் என்றால் சரிதான். அதனால் பெரும்பாலும் வெளியே செல்லமாட்டார். இறந்துபோன நபரின் குடும்பத்தார்கள் மிரட்டுவதாக சொல்லித்தான் எனது மகன்

உயிருக்கு பயந்து நாகர்கோவிலில் இருந்தார் என்றால் சரிதான். நாகர்கோவிலை சார்ந்தவர்கள் தான் எனது மகனை தாக்கி கொலை செய்துவிட்டார்கள் என்றும் அது எனக்கு நன்றாக தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW**11 |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | சுமதி |
| Husband Name | : | பனையடியான் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.12.2022.

முதல் விசாரணை–

நான் உத்திரகோசமங்கை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டெய்லர் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் எனது கணவர் ஆவார். அவர் இறப்பதற்கு முன்பு டிரைவர் தொழில் செய்து வந்தார். அ.சா.4. கபிலன் எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 05.03.2021ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான், எனது மகன் கபிலன், மாமனார் இருளாண்டி, கொளுந்தன் ரவி, அண்ணன் பன்னீர் செல்வம் ஆகியோர்கள் வீட்டில் இருந்தபோது தகவல் கிடைத்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது கணவர் பனையடியான் இறந்தநிலையில் இருந்தார். எனது கணவர் பனையடியானுக்கு தலை, முதுகு, கால், தொடை ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. எனது கணவர் எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனது கொளுந்தன் ரவி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து போன் செய்தார் என்றும் உடனே நானும், எனது மாமனார், மாமியார் ஆகியோர்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் அங்கு எனது கணவர் இறந்தநிலையில் பிரேத சவக்கிடங்கில் கிடந்தார் என்றும் எனது கொளுந்தன் ரவியிடன் என்ன நடந்தது என்று நான் கேட்டேன் என்றும் அப்போது எனது கணவரை எதிரிகள் அருவாள், கட்டை போன்ற ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டார்கள் என்று என்னிடம் சொன்னார் என்றும் இது குறித்து எனது கொளுந்தன் ரவி கேணிக்கரை காவல் நிலையத்தில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நாங்கள் 3 வருடங்களாக உத்திரகோசமங்கையில் தான் வசித்து வருகிறோம். எனது கணவர் நாகர்கோவிலில் தான் வேலை பார்த்து வந்தார். யார் கூப்பிட்டாலும் டிரைவர் வேலைக்கு செல்வார். எனது கணவர் நாகர்கோவிலில் இறப்பதற்கு 7, 8 வருடங்களாக வேலை பார்த்தார் என்றால் சரிதான். எனது கணவர் அவரது முதலாளியின் வைப்பாட்டியை கொலை செய்ததாக சொல்லி முதலாளி மற்றும் என் கணவரின் மீது நாகர்கோவிலில் SC/ST நீதிமன்றத்தில் கொலை வழக்கு இருக்கிறது என்றால் சரிதான். எனது ஒரே மகன் கபிலன் முகம்மது சதக் கல்லூரியில் டிப்ளமோ படிக்கிறார் என்றால் சரிதான். காலை 09.00 மணிக்கு சென்றால் மாலை 05.00 மணிக்குத்தான் வருவார் என்றால் சரிதான். எனது கணவர் மது அருந்துவார். இறந்த தினத்திலும் மது அருந்திருந்தார். என் கணவர் மீது கேணிக்கரை மற்றும் பல காவல்நிலையங்களில் பல வழக்குகள் இருக்கிறது என்றால் சரிதான். எனது கணவர் மது அருந்திவிட்டு தகராறு செய்வதையே பணியாக வைத்திருந்தார் என்று சொன்னால்

சரியல்ல. இறந்த தினத்தன்று நான் வீட்டில் இருந்தபோது தகவல் கிடைத்தது. அவ்வாறு தகவல் கிடைக்கும்போது எனது மகன் கபிலன், மாமனார் இருளாண்டி, கொளுந்தன் ரவி, அண்ணன் பன்னீர் செல்வம் ஆகியோர்கள் வீட்டில் இருக்கும்போது தான் தகவல் கிடைத்தது. அப்போது நேரம் மாலை 05.30 , 06.00 மணி இருக்கும். உடனடியாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு போலிசார் இருந்தார்கள். அங்கு வைத்து தான் போலிசார் முதன் முதலாக என்னையும், என் மகன் கபிலன், என் கொளுந்தன் ரவி, அண்ணன் பன்னீர் செல்வம் ஆகியோர்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதை எழுதிக்கொண்டார்கள். அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம். எனது கணவர் நாகர்கோவிலில் இருந்தபோது கொலை வழக்கிற்கு பயந்து தான் இருந்தார் என்றால் சரிதான். அதனால் பெரும்பாலும் வெளியே செல்லமாட்டார். இறந்துபோன நபரின் குடும்பத்தார்கள் மிரட்டுவதாக சொல்லித்தான் எனது கணவர் உயிருக்கு பயந்து நாகர்கோவிலில் இருந்தார் என்றால் சரிதான். நாகர்கோவிலை சார்ந்தவர்கள் தான் எனது கணவரை தாக்கி கொலை செய்துவிட்டார்கள் என்றும் அது எனக்கு நன்றாக தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல.